# போர் விமானங்கள், கனரக பீரங்கிகள் சகிதம் மன்னார், முல்லையில் படையினர் தாக்கு ஆரம்பம்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 12 இதழ் 223

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28 — 9 — 1993


(கொழும்பு)

போர் விமானங்கள், கனரக பீரங்கிகள் சகிதம் பாதுகாப்புப் படையினர் மன்னார் முல்லைத்தீவு பகுதிகளில் புதிய தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் இத்தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பமானதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முகாம்களிலிருந்து பாதுகாப்புப் படையினர் வெளியே வந்து இந்த நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனராம்.

(2-ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று காலை முதல் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

இவ்விரு மாவட்டங்களிலும் தரைப்படையுடன் இணைந்து விமானப்படையினரும், கடற்படையினரும் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இம்மாவட்டங்களில் பல பகுதிகளில் நேற்று விமானத்தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி-இ)

# வங்காலையில் புலிகள் அதிரடி
# 6 ராணுவம் பலி; ஆயுதம் மீட்பு

## சிப்பாய்கள் பலர் காயம்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் படையினர் மீது விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட அதிவேக அதிரடித்தாக்குதலில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர். சிப்பாய்கள் பலர் காயமடைந்தனர். பல ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப் பற்றப்பட்டன.**

நேற்றுக் காலை ஏழுமணியளவில் வங்காலை இராணுவக்காவலரணிலிருந்து 200யார் தூரம் சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காக முன்னேறி வந்தபடையினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

இத்தாக்குதலில் ரி-56 1 ரக துப்பாக்கி - 04, அதற்குரிய ரவைக் கூடு - 01, ரவைக் கூடு தாங்கி - 01, நடுத்தர ரவைகள் - 120 ஆகிய ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் கடும் சமர்

(கொழும்பு)

மன்னார் முல்லைத்தீவுப்பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குமிடையில் நேற்று பயங்கரப்போர் வெடித்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராணுவ முகாம்களிலிருந்து கனரக பீரங்கிகளின் உதவியுடனும் போர் விமானங்களின் பாதுகாப்புடனும் முன்னேற முயலும் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## படையிலிருந்து தப்பியோரை கைது செய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

படையிலிருந்து தப்பி ஓடிய இராணுவத்தினரை உடனடியாகக் கைதுசெய்து ஒப்படைக்கும்படி, பதில் பொலிஸ் மா அதிபர் மெண்டிஸ் சில்வா சகல பொலிஸ் நிலையங்களையும் பணித்துள்ளார்.

படையிலிருந்து தப்பி ஓடிய இராணுவத்தினரின் பெயர்ப் பட்டியல், சகல பொலிஸ்

(2-ம் பக்கம் பார்க்க)

★ மாகாண சபைகள் அமைச்சரின் அதிகாரங்களுக்கு

## நீதிமன்றம் தடை உத்தரவு

(கொழும்பு)

மாகாணசபைகள் அமைச்சருக்கு இடைக்கால தடை உத்தரவு ஒன்று விதிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க மேல் மாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகளில் சட்ட விரோதமாக தலையிடுவதாக மேல்மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நீதிமன்

(2-ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப் பகுதியில் கடற்படை பீரங்கித் தாக்கு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பிராந்தியத்தில் நேற்றிரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், வல்வெட்டித்துறைப் பகுதியில் கரையை அண்மித்த குடியிருப்புக்களை நோக்கி அதிகாலை 5-00 மணியளவில் பீரங்கித் தாக்குதலை

(4-ம் பக்கம் பார்க்க)

## விமானங்கள் ரோந்து

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று விமானப் படையினரின் விமானங்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

(2-ம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் பகுதியில் அகோர விமானத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதியில் நேற்று இரவு, விமானங்கள் பலத்த குண்டுத் தாக்குதல்களையும் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று இரவு 7-00 மணி தொடக்கம் 8-00 மணிவரை குண்டு வீச்சு விமானங்கள்

(2-ம் பக்கம் பார்க்க)

## பயணிகள் சிதறி ஓடினர்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு, பூநகரி, சங்குப்பிட்டி முனை இராணுவமுகாம்களில் இருந்து கிளாலியை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

நாலாதிசையிலும் இருந்து

(2-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புதேடிய பெண்ணை பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

விமானத்தாக்குதல் ஷெல் தாக்குதல்களுக்குப் பாதுகாப்புத்தேடி ஓடியவர்களில் ஒருவரை பதுங்குகுழிக்குள் இருந்த பாம்பு தீண்டியுள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

வாந்திபேதி நோய்:

## மேலும் 25 பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பரவி வரும் வாந்திபேதி நோயினால் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இருபது பேர் யாழ். ஆஸ்பத்திரியிலும் 5 பேர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பயணிகளிடம் ரயில்வே ஊழியர் பணம் பறிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் இருந்து கொழும்பு செல்லும் தமிழ்ப் பயணிகளிடம், ரயில்வேப் பாதுகாப்பு ஊழியர்கள் பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

இராணுவத்தில்

## பிரிகேடியர்களாக 11 பேருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா இராணுவத்தில் 11 பேர் பிரிகேடியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

குலதுங்க, அப்பு ஆராய்ச்சி, வீரசூரிய, நழுனி, ஜெயவர்த்தன, சமரதுங்க, பொன்னு

(4-ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

வெளிவந்துவிட்டது

மாற்றம் மக்கள் சஞ்சிகை யின் ஆடி—புரட்டாதி இதழ் சிறுகதை, கவிதை, கட்டுரை களுடன் வெளிவந்துவிட்டது. ரூபா 10/-. (இ-484)


# செய்திச்சிதறல்

## உதவிப் பணம்

(பண்டத்தரிப்பு)

சங்கானையில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் யுத்த. காசநோய், தொழு நோயாளர்களுக்கு கடந்த யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது. —72

## வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உப-அலுவலகப் பகுதிக்குட்பட்ட நான்கு வீதிகள் சுமார் 2½ லட்சம் ரூபா செலவில் திருத்திப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. 52

## நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் மலேரியா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (59)

## பாராட்டு வைபவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அதிபராக இருந்து இளைப்பாறிய அதிபர் திருமதி லீலா சந்திரசேகரத்தின் சேவையைப் பாராட்டி பருத்தித்துறை வடஇந்துமகளிர் கல்லூரியின் அபிவிருத்தி சபை கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம், கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள் ஆகியோர் தனித்தனியாக சேவை நலன் பாராட்டுக்களை நடாத்தினர்கள். -52

## வாந்திபேதி பரவுகின்றது

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகரசபைப் பகுதிக்குள் யாழ். ஆஸ்பத்திரி வீதி, நல்லூர் வீதி ஆகியவற்றிலும் சிலருக்கு வாந்திபேதி நோய் கண்டுள்ளது. -59

## விவசாயிகளுக்கு ஒய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பேருக்கு முதல் தடவையாக ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது. -72

## திருட்டு

(நெல்லியடி)

கடலில் மீன் பிடித்த பின்னர் காயவிடப்பட்ட வலைகளின் மிதப்புக்கட்டைகள், கற்கோவளம் பகுதியில் திருடப்பட்டுள்ளன. இதுபற்றி பருத்தித்துறை காவல் துறையில் புகாரிடப்பட்டுள்ளது. -160

## நிவாரணம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவ நடவடிக்கை காரணமாக காயமடைந்தவர்கள், இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் ஆகியோருக்கான கடந்த ஆடி, ஆவணி மாதங்களுக்கான இலவச நிவாரணம் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் கிளை அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. —72

## மருந்து கொள்வனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சுமார் 20,000 ரூபா பெறுமதியான ஆயுர்வேத மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு வந்து சேர்ந்துள்ளன. —52

## பொருட்காட்சி

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் மகாவித்தியாலயத்தின் பாடசாலை மட்ட வாழ்க்கைத் திறன் பொருட்காட்சி மேற்படி பாடசாலை தற்போது இயங்கிவரும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. —101

## இருவருக்கு தொழுநோய்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் மேற்கு குடாக்கரை என்ற இடத்தில் அண்மையில் மேற்கொண்ட தொழுநோய் ஆய்வின்போது இருவருக்கு தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது —72

## குடிநீர் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

நாவற்குழி லவனியா அகதிகள் முகாமில் குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது.

குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் குடிநீர் எடுத்துவர பல மைல்கள் தூரம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. —154

## கோழித்தீன் தயாரிப்பு முயற்சி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலே பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்டு வரும் கோழித்தீனை இங்குள்ளவர்கள் கோழி வளர்ப்பதற்கு பயன்படுத்தி வருவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலங்களில் கோழித்தீனுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதாக இம்முயற்சி அமைந்துள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கருணாமிகு காசிவிநாயகப் பெருமானின் 23ஆவது ஆண்டு மணவாளக்கோல உற்சவம் பக்தி பூர்வமான முறையில் அண்மையில் கொண்டாடப்பட்டது. (ம)

## நவராத்திரி விரதம்

(சுன்னாகம்)

நவராத்திரி விரதம் அடுத்த மாதம் 16ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது. மகாநவமி சரஸ்வதிபூசை 23-10-93 சனிக்கிழமையும், மானம்பூ விஜயதசமி பூசை 24-10-93 ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும். (165)

## கண்நோய் பரவுகிறது

(அரியாலை)

யாழ் மாவட்டத்தில் அரியாலை, குருநகர், இராசாவின் தோட்டம் ஆகிய இடங்களில் பள்ளிமாணவர்களின் பெருக்கத்தால் கண்நோய் பரவியுள்ளதாக தெரியவருகின்றது. கடந்தவருடமும் செப்டெம்பர் மாதத்தில் இந்தநோய் பலருக்கு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (59)

## வாகனம் அன்பளிப்பு

(சுன்னாகம்)

துன்னாலை வடக்கு பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலுக்கு இரண்டு வாகனங்களை வல்வெட்டித்துறை உதவி அரசாங்க அதிபர் ஒழுங்கையைச் சேர்ந்த வ. அ. சோமசுந்தரம்பிள்ளை குடும்பத்தினர் கடந்த 25-ம் திகதி சனிக்கிழமை பதினொராம் திருவிழா அன்று அன்பளிப்புச் செய்தனர். மகாலட்சுமிக்கு யானை வாகனமும், விநாயகர் பெருமானுக்கு மூஷிக வாகனமும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (165 சி)

## பயணிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீப்பிளம்புகளாக இடைவிடாது சுமார் 30 நிமிட நேரம் இடம் பெற்ற இப்பயங்கரத் தாக்குதல்சம்பவத்தால் அஞ்சிய பயணிகள் கைப்பொருள்கள் பொதிகளை அந்தந்த இடங்களிலேயே விட்டு விட்டு திசை தெரியாது சிதறி ஓடி பாதுகாப்புதேடி பற்றைகளுக்குள்ளும் அவ்விடங்களில் தென்பட்ட பதுங்கு குழிகளுக்கும் பதுங்கிக் கொண்டனர்.

கடலில் பயணத்தை தொடங்கியபடகுகள் அக்கரையை நோக்கிப்பயணத்தைத் தொடர்ந்தன.

இத்தாக்குதல் சம்பவங்கள் முடிவடைந்ததை அடுத்து சிதறி ஓடியமக்களில் சிலர் திரும்பி தம் பொருட்களை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினர். (சு-இ)

## தமிழ் பயணிகளிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் தம்முடன் கொண்டு செல்லும் பொதிகளுக்குப் பணம் செலுத்த வேண்டுமென்று பயணிகளை மிரட்டி, ரயில்வேப் பாதுகாப்பு ஊழியர் தற்போது பணம் பறிக்கின்றார்களாம்.

பணம் செலுத்திக் கொண்டு செல்லும் பொதிகளுக்கும் மேலதிகப் பணம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவீர்கள் என்று பயமுறுத்திப் பயணிகளிடம் பணம் பறித்த சம்பவங்கள் தற்போது நடைபெறுவதாகப் பயணிகள் தெரிவித்துள்ளனர். -வி-இ

## மாகாண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்

அமைச்சர் ஜோசன் அமரதுங்க மேற்படி மாகாண சபையின் நடவடிக்கைகளில் தலையிடுவதைத் தவிர்க்குமாறு திரு. விக்கிரமநாயக்க தனது மனுவில் கேட்டிருந்தார்

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8-ம் திகதி வரை அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் அதிகாரங்களை இடை நிறுத்தும் வகையில் தடை உத்தரவு ஒன்றை வழங்கியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## வாந்திபேதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டனர்.

நாவாந்துறையிலும் கைதடியிலுமே மிக அதிகமாக இந்நோய் பரவி வருவது வைத்திய சாலைப் பதிவேட்டின் படி தெரிய வருகிறது. நேற்று 11 பேர் நாவாந்துறையில் இருந்து அனுமதிக்கப்பட்டனர். பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டைப் பகுதிகளிலும் இந்நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இருந்தும் வாந்திபேதி நோயாளர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் இதுவரை 140 க்கும் மேற்பட்டோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சு - இ)

## கப்பல் திருவிழா

(நாவலியூர்)

வடமராட்சி கிழக்கில் பிரசித்திபெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியும், தேர்த் தோற்சவதிருவிழா ஒக்டோபர் மாதம் நாலாம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறவிருக்கின்றன. - 168

யாழ்,பல்கலைக்கழக

## மாணவருக்கு மண்ணெண்ணெ

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக உள்வாரி மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வோர், இராமநாதன் நுண்கலைத் துறை மாணவர்களுக்கு தலா 4லீற்றர் மண்ணெண்ணெ லீற்றர் 22 ரூபாப் படி வழங்கப்பட்டுவருகிறது.

அடுத்தமாதம் 5ம் திகதி வரை மேற்படி விநியோகம் யாழ் பல்கலைக்கழக வளாகப் பகுதியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. —ச

## விமானங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு புக்காரா விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் இந் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

யாழ். நகரப் பகுதிகளை ஊடறுத்து இவ்விமானங்கள் அடிக்கடி பறந்ததைக்காணக் கூடியதாக இருந்தது (சு)

## போர் விமானங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள், கனரக பீரங்கிகள், மற்றும் பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்கள் இதற்கென பயன்படுத்தப்பட்டுவருவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. -இ

## கிளாலிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த குண்டுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளன இதே நேரம் கடலிலிருந்து கடற்படையினர் இடைவிடாது பீரங்கித் தாக்குதல்களை கிளாலி கடற்கரைப் பகுதியை நோக்கி நடாத்தியதாகவும் கூறப்படுகின்றது. வி-இ

## படையிலிருந்து

1-ம் பக்கத் தொடர்ச்சி

நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் படையில் இருந்து தப்பியோடும் இராணுவத்தினர் வெளிநாட்டுக்குச் செல்வதற்காகப் பணம் தேடும் நோக்கில், கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

மேலும் படையிலிருந்து தப்பியோடுவோரைப் பிடிக்கும் முயற்சியில், புதிய படை அணி ஒன்று செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -ச-இ

## பாதுகாப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

கிளாலியில் நேற்று இரவு பயணிகள் படகுச்சேவை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை அங்கு வந்த ஸ்ரீலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சுவிமானங்கள் தாழப் பறந்து குண்டுவீச்சுக்களை மேற்கொண்டபோது படகுக்காக காத்திருந்தவர்கள் பாதுகாப்பு தேடி ஓடிப்பதுங்கிக் கொண்ட போதே இச்சம்பவம் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பிராசா மகாலட்சுமி (வயது 21) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

பாம்பினால் கடியுண்டவர் உடனே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (சு - இ)


WANTED

A Journalist with Competency in English Language along with Experience. Apply with details before 30-9-93.

Advt. No: 3445
C/o Eelanadu Ltd,
Jaffna.

(ஏ-3445)



திருத்தம்

22-09-93ல் "ஈழநாடு" பத்திரிகையில் பிரசுரமான புங்குடுதீவு — நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்தின் விளம்பரத்தில் குறிப்பிட்ட தேர்தல் உத்தியோகத்தரின் பெயர்

நா. தவநாதன்

என்பதாகும்.

(ஏ-3434)



மாருதி வீடியோ விஷன்
புதிய வெளியீடுகள்

★ ராஜதுரை விஜயகாந் (இருவேடம்)
மேஜர் சுந்தரராஜன்
அமலா சரத்குமார்

★ சிவராத்திரி

(வீடியோ பிரதிகள் உடனுக்குடன் பதிவு செய்து தரப்படும்.)

பரமேஸ்வராச்சந்தி - திருநெல்வேலி.

(சி-487)

# ★ 2000-ம் ஆண்டில் ஒருகோடி 30லட்சம் பெண்கள் எயிட்ஸ் நோய்க்கு உள்ளாவர்

(கொழும்பு)

2000ம் ஆண்டளவில் உலகில் 13கோடி 30லட்சம் பெண்கள், எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பார்கள் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் 40 லட்சம் பேர் இந்த ஆண்டில் மரணமடைந்திருப்பார்கள். இந்த ஆண்டில் மட்டும் 10 லட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில், பெண்கள் போதைவஸ்துக்களின் மூலம்பரவுதலிலும் எயிட்ஸ் நோய்க்கு ஆளாகின்றனர். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் எயிட்ஸ் நோய் தொற்றியுள்ளது.

அமெரிக்காவைக் மட்டும் கடந்த ஆண்டுகளைவிட இவ்வருடம் 10 வீதமான பெண்கள் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. -வி-இ

# வீதி விபத்தில் ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி பிரதான வீதியில் நேற்று காலை இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற கல்வியங்காட்டைச் சேர்ந்த ஜெயராமதுரை சவந்தரன் (வயது28), அவர் மனைவி அமிர்தகௌரி (வயது 23) மற்றும் சைக்கிளில் சென்ற பாலசுந்தரம் மதுவேணு (வயது 7) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவருடன் சென்ற இவரது சகோதரிகளான பாலசுந்தரம் திருஷ்ணவேணி வயது 11, பாலசுந்தரம் உஷாநந்தினி (வயது 18) ஆகியோரே காயமடைந்த யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். -க-இ

## சங்கீத, நடன ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் பணியாற்றும் சங்கீத, நடன ஆசிரியர்களின் கூட்டமொன்று நாளை புதன்கிழமை 29ம்திகதி காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறுமென கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## டிப்ளோமா பயிற்சி நெறி 1993 / 94

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனம் நடாத்தும் ஒழுங்கு செய்யப்பட்ட 1993 - 94 பயிற்சி நெறி மீண்டும் அக்டோபர் 9-ம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பொழுது ஆரம்பமாகி நடைபெற்று வரும் முன்னேடிப் பரீட்சை காரணமாக எதிர் வரும் 30-ம் திகதி நடைபெற இருந்த டிப்ளோமா பயிற்சி நெறி பின்போடப்பட்டுள்ளதென்று யாழ். கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## பழனியில் அ.தி.மு.க வெற்றி

(சென்னை)

பழனி நாடாளுமன்றத்திற்கு சுயேச்சை இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளரான பி. குமாரசாமி வெற்றிபெற்றதாக உத்தியோகபூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இத்தொகுதி தேர்தல் முடிவை வெளியிடக்கூடாது என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (க-இ)

## 50 கலிபர் தாக்கு

(நெல்லியடி)

நேற்று அதிகாலை வேளை வானில் வட்டமிட்ட ஸ்ரீலங்கா படையின் ஹெலிகப்டர் 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

இச்சம்பவம் வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்வெட்டித் துறையிலும் பொலிகண்டி கடலிலும் இடம் பெற்றது.

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் உயிர் தப்பி கரைசேர்ந்தனர். (160-இ)

# ★ ராஜீவ் கொலை வழக்கு: 20 சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜராகவில்லை

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 26 பேரில் 20 பேர் நேற்று நீதிமன்றத்துக்கு ஆஜராக மறுத்தனர். நீதி விசாரணையை ஒக்டோபர் மாதம் 11-ம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

பூந்தமல்லி சிறைச்சாலையில் உள்ள மேற்படி கைதிகளை சிறைச்சாலைகளில் நீதிமன்ற விசாரணைக்கு அழைத்துச் சென்ற பொழுதுபோது அன் கைதிகள் அனைவரும் தமது உடம்பு முழுவதும் எண்ணெயைப் பூசிக்கொண்டிருந்ததால் சிறைக் காவலர்களால் அவர்களைப் பலவந்தமாக தூக்கிச் செல்லமுடியவில்லையாம்.

குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேர்களை சிறைக்காவலர் நீதிமன்றத்துக்கு வரும்படி அழைத்தபோது நீதிபதி எனக்கு நம்பிக்கை வந்தால் எங்களை நீதியின் மானமனில் செய்ய முடியும் என்று தெரிவித்தார் எனக் கூறியுள்ள வேறு எனக்கூறிய நாம் வேறுவழியின்றி சிறைக்காவலர்கள் தமது முயற்சியை கைவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-இ)

## ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதல்: தமிழகத்தில் மீனவர் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(சென்னை)

தமிழகமீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று தமிழக நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் மீனவர் சமூகத்தினர் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

இதனால் நேற்று இம்மாவட்டம் முற்றாக செயலிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பேருந்துகள் எதுவும் ஓடவில்லை. கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

மீனவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கவேண்டுமெனவும் மேற்படி மீனவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (கி-க-இ)

## இந்திய லொரிஉரிமையாளர் வேலைநிறுத்தம் முடிந்தது

(புதுடில்லி)

இந்தியாவில் கடந்த 12 நாட்களாக லொறி உரிமையாளர்கள் நடத்தி வந்தவேலை நிறுத்தம் நேற்று முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

லொறி உரிமையாளர்களுக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமரசத்தினால் மேற்படிவேலை நிறுத்தம் முடிவடைந்துள்ளது.

இதேநேரம் பல மாநிலங்களில் இந்த வேலை நிறுத்தத்தினால் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பலரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் வீதிகளில் ஆங்காங்கே லொறிகள் பெருமளவில் முடங்கி நிற்பதாகவும், இதனால் போக்குவரத்தில் பெரும்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## மண்ணெண்ணெ விநியோகம் பற்றி இன்று யாழ்.செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நிவாரணக் கப்பலில் வந்த மண்ணெண்ணெயை பொது மக்களுக்கு எந்த அடிப்படையில் வழங்குவது என்பதை ஆராயும் முகமாக இன்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் ப. நோ. கூ. சங்க தலைவர்களுக்கு கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளார்.

ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கங்களுக்கும் எத்தனை பரல் மண்ணெண்ணெய் வழங்குவது, பொது மக்களுக்கு எத்தனை லீற்றர், என்ன விலையில் வழங்குவது போன்ற விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படஇருப்பதாகயாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வி-இ)

### வடமராட்சிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டனர்.

இதேவேளை ஹெலிகொப்டர் ஒன்றும் அப்பகுதிகளுக்கு மேலாகப் பல தடவைகள் வட்டமிட்டுக்கொண்டு இருந்தது.

அதிகாலை வேளை இடம் பெற்ற இச்சம்பவத்தினால் அப்பகுதி மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர். -சு-இ

### இராணுவத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்டோ, ஜயசுந்தர வீரசேகர, பீரிஸ், திலகரட்ண ஆகியோரே பதவி உயர்வு பெற்றுள்ளவர்களாவர்.

இதற்கிடையில் விமானப் படைபொறியியல் பிரிவில் கடமையாற்றிய ஏயர் வைஸ் மார்ஷல் பெர்னாண்டோ தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். (க-சி

### வங்காலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து நிலை குலைந்த படையினர் இழப்புகளுடன் தமது காவலரணை நோக்கி ஓட்டமெடுத்ததாகவும் தெரிய வருகிறது.

இதேவேளையில் மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் பலத்த குண்டுத்தாக்குதலை மேற்கொண்டனவாம்.

இதன்போது பொதுமக்கள் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய தகவல் எதுவும் இது வரையில் தெரியவில்லை.

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று உறுதிப்படுத்தின. (க)

### தொடர்ந்தும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க இயலாத படையினர் பாரிய இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாகவும், தமது முன்னேற்ற முயற்சிகளை படையினர் கைவிடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளையில் இப்பகுதிகளில் கடுமையான போர் இரு தரப்பினருக்குமிடையில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் தேர்தல்நடத்த அரசு முடிவு — பிரதமர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சகஜநிலை நிலவும் பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவைகள் தேசிய தொழில் நுட்ப ஊழியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சிச் சபைகள் திறமையாகச் செயற்படாமையினால் அபிவிருத்தி வேலைகளை இப்பகுதியில் மேற்கொள்ளமுடியாமல் உள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகளை ஜனநாயக வரம்புக்குட்பட்ட வகையில் தீர்வு காண அரசு முயன்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க-இ

## வெஞ்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களின் செப்டம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்தன.

இவர்களுக்கு யூலை முதல் அதிகரிக்கப்பட்ட 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படியும் நிலுவையுடன் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. (71-இ)

## சைக்கிள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ் ஆஸ்பத்திரி வளவினுள் பூட்டிய நிலையில் இருந்த சுமார் 5000 ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்று இனந்தெரியாத திருட்டுக்கோஷ்டி ஒன்றினால் திருடப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆஸ்பத்திரி தொண்டர் கடமைக்கு வந்த செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர் ஒருவருடைய சைக்கிளே திருடப்பட்டது க-இ

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான வயோதிபர் ஒருவர் உடுவில் பகுதி தோட்டமொன்றில் சடலமாகக் காணப்பட்டார்.

மானிப்பாய் ஆனந்தா வீதியைச் சேர்ந்த சுந்தையா துரைராசா (வயது 55) என்ற வயோதிபரே சடலமாகக் காணப்பட்டவராவார். (சு-இ

## மரண அறிவித்தல்

### தம்பையா சதாசிவம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா சதாசிவம் (ஓய்வுபெற்ற அதிபர்) நேற்று (27-09-1993) கொழும்புத்துறையில் காலமானார். இவர் திருமதி தெய்வானைப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், கமதியின் அன்புத் தந்தையாரும், பேரம்பலம், காலஞ்சென்ற பரமநாதர், காலஞ்சென்ற பூரணம் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-09-93) மாலை 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி சதாசிவம்
(மனைவி)

27, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

(இ-486)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B: